262

# மக்அது சிதுகு மனேன்மணி மாலை

18 படலங்களடங்கியது.

அ. ம. ஹக்கீம் யூஸுபு பாவலர்

பக்ரியில் அசுகரியில் காதிரிய்யி அவர்களால்

இயற்றப்பட்டது.

பிரசுரம்:—

U. P. முஹம்மது அப்துல் கனி

ஒலிவில்,

அக்கரைப்பற்று போஸ்ட்,

(சிலோன்.)

1949. [அணா 8

Q7:417
N49
11419

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்அது சிதுகு
# மனோன்மணி மாலை

18 படலங்களடங்கியது.

---

அ. ம. ஹக்கீம் யூஸுபு பாவலர்
பக்ரியில் அசுகரியில் காதிரிய்யி அவர்களால்
இயற்றப்பட்டது.

பிரசுரம்:—

U. P. முஹம்மது அப்துல் கனி
ஒலிவில்,
அக்கரைப்பற்று போஸ்ட்;
(சிலோன்.)

விலை] 1949. [அணா 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது 18 படலங்களடங்கிய

மக்அுது சிதுகு மனோன்மணி மாலை 1-ம் பாகம்

இனி 2-ம் பாகம் கூடிய சீக்கிரம் வெளிவரும்.

**அ. ம. ஹக்கீம். யூசுபு பாவலர்**

பக்ரியில் அசுகரிய்யில் காதிரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருத்தம்

அருட்சிறந்த மக்கககர் ஆமினம்மா தன்மதனை
இருளகற்றிக் கார்க்கவந்த எங்களிர சூலருளால்
பொருள்விளங்கும் ஞானநெறி போதனையைச் செந்தமி
கறளகலவே இசைக்கக் கத்தவனே நீகாப்பு [ழால்

## இதுவுமது

மன்னவராம் அபூபக்கர் உமர் உதுமானலியும் [தால்
மின்னும் ஹஸனுஸைன் பாத்திமா தங்கள் பெருந்தவத்
இன்னகர் மிக்கப் புகலு மெய்ஞ்ஞானத் திசையதனை
வன்னத் தமிழ் மொழியாக வெடுத்திதை வாழ்த்துவாமே

## அறுசீரடி விருத்தம்

வரியினங்க ளிசைபாடச் செந்தேனேடும்
　　வரிசையுறு ஒலிவிலெனு ககரின்மிசை
கருவுறையும் மன்னஹமத் மரைக்காரென்னும்
　　கனவானின் தவமுருவாய் வந்தசீலன்
அருவுறையு இளவரச யூசுப்லெப்பை
　　ஹக்கீமிந்தச் செந்தமிழால் கவிதைப்பாட
ஒருபொருளாய் பெரும்பொருளா யடக்கியாளும்
　　உடையவனே நின்னருளைப் புரிகுவாயே

OFFICE

# அட்டவணை


| | படலம். | பக்கம். |
|---|---|---|
| 1 | காரணப் படலம் .... .... | 5 |
| 2 | தாத்தின் விசுவாசப் படலம் .... | 6 |
| 3 | ருஹூ வரலாற்றுப் படலம் .... .... | 9 |
| 4 | படைப்பின் வரலாற்றுப் படலம் .... | 10 |
| 5 | அட்சரத் தொகுப்புப் படலம் .... | 12 |
| 6 | கலிமா விளக்கப் படலம் .... .... | 13 |
| 7 | ஈமான் விளக்கப் படலம் .... .... | 14 |
| 8 | கலிமூ பறுளு விளக்கப் படலம் .... | 14 |
| 9 | சுன்னியாத் தொழுகைப் படலம் .... | 16 |
| 10 | ஞான திரவுகோல் படலம் .... .... | 19 |
| 11 | ஞான உதயப் படலம் .... .... | 24 |
| 12 | முஷாஹிதாப் படலம் .... .... | 27 |
| 13 | மகாமாத்துப் பிரிவு படலம் .... .... | 29 |
| 14 | குரு வணக்கப் படலம் .... .... | 31 |
| 15 | முஷாஹிதா காட்சிப் படலம் .... | 33 |
| 16 | தாஜாத்துப் படலம் .... .... | 35 |
| 17 | உபதேசப் படலம் .... .... | 37 |
| 18 | சுவாச கிலேப் படலம் .... .... | 41 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மக்அது சிதுகு மனோன்மணி மாலை

## காரணப் படலம்

புகழும் அல்ஹம்தாய் கிரம்பிகின்ற
    பூரணக் கோலம் படைத்திரணம்
மகிழும் தாரதலம் போல்கொடுக்கும்
    மன்னன் தனைகாங்க ளறிந்துதொழ
திகழு மொருநான்கு விபார்தனில்
    தெளியு மக்அது சிதுகுமாலை
கிகழும் படியாக உன்கிருபை
    கித்தம் புரி அவ்வ லானவனே 1

அவ்வ லானது நுக்தாவிலே
    அமைந்து அதில்ருஹூ சமைந்தவாறு
செவ்வை யதுழாஹிர் மக்லூக்காத்தை
    தேற்றி சுரூபமாய் வகுத்தவாறு
பூவையது பாத்தின் தன்னில்நின்றும்
    புகலு நபிமார்க்கம் பிரிந்தவாறும்
கொவ்வை யதுஆகி ரதனைக்கொண்டு
    கூலி கொடுக்கின்ற வாறுகண்டாய் 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டா யது அவ்வல் தௌஹீதிலே
கலந்த ஒருமையா யெடுத்துச்சொல்லும்
விண்டேனது ஜாஹிர் ஷரஹிலுள்ள
வேண்டும் பிரிவெல்லா மெடுத்துச்சொல்ல
சென்று லதுபாத்தின் அல்லாவிலே
சேரும் பிரிவெல்லா மெடுத்துச்சொல்லும்
என்று மதுஆகிர் தறஜாவுடன்
இருக்கும் கிஃமத்தைப் பிரித்துச்சொல்வாம் 3

---

## தாத்தின் விசுவாசப் படலம்

தாத்தின் தஜல்லியாத் தெதுபோலென்றால்
தக்க ஒருஷம்ஸின் சுடரானது
கோத்து சிலபாண்டம் நிறமைகொள்ளும்
கூறு யுயிரெல்லா மவனொளியில்
சேர்த்து கடலுடன் னிருப்புதாலே
திாளும் மழைமேகம் சூழ்ந்தவாறாய்
வேற்று சிலபல திரைகளாலே
வேறு யிருக்கும்போல் கூறுகண்டாய் 1

ஞன்ஹறு தாத்தினில் அஹ்தியத்துள்
கோலங் குறிப்பற்ற அமாவானது
கன்சுல் மக்பியா யிருக்கதுபோல்
காணும் மழுஹறு சிபத்துடனே
மின்சமதில் ரண்டாம் அஃயானிலே
மேலா முஹம்மதென் றொளியில்பாய்ந்து
பஞ்ச பூதாதி சகலமான
படைப்பு மதைச்சூழ்ந்து இருப்பதாமே 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த விதமாக இருந்தபோதும்
ஏகன் அஹதென்ற முன்கோலத்தில்
எந்த விதத்தாலும் குறைவில்லாமல்
இருக்கு மதுதன்னில் ஞானகவே
வந்து உலகத்தில் கதீமாகிய
மறுத்தபா நாரு முஹம்மதியா
சிந்தை இதுதானே இன்ஸானிலே
சேர்ந்த மறுத்தபா வாஹிதாமே 3

வாஹி தாகிய மறுத்தபாவில்
வாரிக் கடலலை மோதும்போது
உஹதத் தெனு நாரு முஹம்மதியா
ஒளிவில் கடலலை ஒதுங்கிவாரி
செகத்தி லறுவாஹு மிதால் அஜ்ஸாம்
சேர்ந்து வரும்இன்ஸான் ஆககாலும்
ஷஹிதத் தெனும்இன்ஸான் றஹ்மானிலே
சார்ந்து இருப்பதை உரைக்கும்கூறே 4

கூறும் ஹைவானி ஷஹ்வானியும்
கொள்ளும் ஷைத்தானி சபுசானியும்
வேறு இவைநான்கு மாறுகவும்
வெற்றி பெறுவது தறஜாவிலே
ஊறு றஹ்மானி மலக்கானியும்
உவந்த றூஹானி சுல்த்தானியும்
தேறும் வுஜூதுஇல்மு நூர்ஷுஹூது
சிறந்த வணக்கத்தைப் பொருத்தி நிற்கும் 5

கண்டா லிதனைநாம் கடக்கவென்றால்
கருணை சிபாத்திலே தாத்துமுண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்று வரச்சொன்ன அமலினுலும்
வேற்றுமை யெனும் இறுக்கைவிட்டு
தண்டாயுத மெனும் அறிவினுலும்
தரித்து அமல்செய்யார் ஜாஹிலென்று
மன்றல் குடைசூழும் நபிஇறசூல்
மதன மொழிவாயா லெடுத்தோதினர் 6

மவுத்தாகு மூன்னர் மவுத்தாகென்று
மன்னன் உரைத்திட்ட ஹதீதின்படி
சவுத்தாகிய அத்தக் கருத்தாவது
ஸாலி ஹீன்களின் ஹவாநபுசை
அகத்தால் மவ்த்தாக்கி ரூஹைக்கொண்டு
ஹயாத்துப் பெறுவது வேணுமென்று
செகத்தாரிதைநன்ரு யறியும்படி
தெளிவா யுரைக்கிறேன் மண்ணுள்ளோரே 7

மண்ணில் அம்மாரு ஹைவானியா
வாழும் தண்ணீரில் மடியப்பண்ணும்
தண்ணீர் லவ்வாமா ஷஹ்வானியா
சாருமது காற்று மடியப்பண்ணும்
பின்னுமது காற்று ஷைத்தானியா
பேசு நெருப்பதை மடியப்பண்ணும்
உன்னு நெருப்பிலே நபுஸானியா
உயர்ந்த ஆகாசம் மடியப்பண்ணும் 8

மடியும் மவுத்தது நபுஸுக்கல்லால்
மாரு ரூஹுக்கு மவுத்தொன்றில்லை
கொடிய நபுஸெல்லாம் ரூஹுடனே
கோத்து தவம்செய்து குதுஸிலானல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படியும் படிசெய்து கெட்டியானால்
பகரும் விலாயத்தால் மடியரதென்று
நெடியோ னருள்பெற்ற ஒலிமார் சொன்னார்
நேராய் விரும்பிய தலத்தில்செல்லும் 9

தலத்தி லிதற்காக அநேகரெல்லாம்
தரணி தனில்மாண்டா ரறியாமலே
குலத்தால் வமிஷத்தால் பணங்காசினால்
கூடும் உத்தியோக மிவையொன்றாலே
பிலத்தால் முடியாதால் தவங்கள்செய்து
பேறும் தகுதியும் பெறலாமென்று
நிலத்தில் நபி சொன்னார் உம்மத்துக்கு
நீதி யுணர்ந்துபார் முஸ்லிம்களே 10

## ருஹூ வரலாற்றுப் படலம்

அவ்வ லானது நுக்தாவிலே
அலிபா யிருந்தது இடவலமாய்
செவ்வை வலப்பாதி ஆணலிபு
சிறந்த இடம்பெண்ணாய்த் திருவாதிமுன்
கொவ்வை இதழ்போன்ற அலிபுலாம்மீம்
கோர்த்துக் குதறத்தி னுள்ளாகவே
ஒவ்வ ஒருகாபு நூனாகிய
உகந்து இறை முன்னே யோசையாமே 1

ஓசை நுக்தாவும் அலிபுமாக
உம்மென் றுரைத்தது முதலோசையாம்
நேச இருபிளப் பானபின்பு
நெகிழு மதிலெழு குன்னென்றோசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேச விசபயக் கூறாய்வந்து
தெளிந்த ஒளி அவ்வலிதுவாகென்று
வாச முஹம்மது கபிக்குகாயன்
வகுத்தான் மிஃறாஜில்•வரிசையாக 2

வரிசை முதல்காபு கலியுமாகி
வளர்ந்த நான்நாரு முஹம்மதாகி
தெரிசன முள்ள படைகோலங்கள்
சிறந்த கலிமாவா யெழுந்தகோலம்
பரிசை பலன்பெற இதையெடுத்து
பகர முடன்சொன்னான் வேதத்திலே
அறுஷி லிதைத்தானே காணிக்கையாய்
அல்லா சமீபத்தில் பதித்ததாமே 3

## படைப்பின் வரலாற்றுப் படலம்

பரிந்த முதல் அவ்வல் இருதாவிலே
பகரு மதுகல்பு கஃபத்துல்லா
செரிந்த சிதுரத்து நினைவுக்குள்ள
சேரு முகத்தீசு ஹல்காவிலே
பிரிந்த கவ்சைனி வில்மத்தியில்
பேசு மறுளியா லூளைசங்கம்
விரிந்த மஹ்றூது கண்ணாடியில்
வேண்டும் குருசான கண்பார்வையாம் 1

கண்ணாடிக் குள்ளே ஒளிவிலங்கும்
காணும் அறுஷிலே தாத்தின் சிர்று
விண்ணாடர் போற்று மொருபொருளை
வேண்டும் நுக்தாவு மலிபும்ஷத்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னன் அதின்சிர் று வெளியானதால்
மாற்றம் நமக்குண்டோ அனுகிய்யத்து
தன்னை யறியவே பருளானதால்
சாற்றும் சிசுகோலம் தன்னைச்சொல்வாம் 2

சிசுவைப் படைக்கவே சூதறத்துள்ள
தெளியும் வரலாறைச் சொல்வேன்மக்காள்
பசியின் ருசிபுசிப் பதனுல்சுவை
பரவு மண் தண்ணீர் நெருப்புகாற்று
விசையின் அதிகார மதனுல்விந்து
விளைந்து மணியாகத் திரண்டுபின்பு
திசையின் ஷஹ்வானி அதின்பாகமாய்
சேரத் துளிமூன்று விழுந்ததாமே 3

ஆக விழுந்ததை ஜடலத்துக்கொண்
டழகாம் ரூஹூக்கொண்டும் ஹயாத்துகொண்டு
ஏக பரஞ்சோதி தத்துவத்தால்
இருந்து உம்மெனப் பொருத்தியபின்
தேக பரிசுத்தம் இலாஹியென்ற
சிறந்த இஸ்மதைப் பகரமாக்கி
பாக முடன்ரூஹூ தந்திரமாய்
பருகி நுழைந்துபின் னுருவானதே 4

ஆனா மூன்றெழுத் ததில்கூடியே
அழகாய்ச் சிரசாகச் சுரூபித்தபின்
தானே ரூஹூடன் ஹயாத்துமின்னும்
தக்க பலாபலன் தனையெழுதி
கான முறுவே தத்துவத்தால்
கலந்து பதிந்துபின் மூடிபோட்டான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான முறப்பத்து வாய்வுகூடி
    மலர்ந்து சுரூபக்தான் வாழ்க்துதாமே 5

மலர்ந்த சுரூபக்தான் மதமுண்டாகி
    மலரும் ருசிதனக் குணவுதேட
கலந்து ஹயாத்துடன் மலக்காணியில்
    கருதும் ருசிதனைப் பருககாடி
உலர்ந்த ருசிதனை தொப்புளாலே
    உவந்து பருகவே சிசுபாலராய்
இலங்க எழுகான்கு அட்சரத்தால்
    இருந்து மதலையாய்ப் பிறந்துதாமே 6

## அட்சரத் தொகுப்புப் படலம்

அறியுங்காள் இன்ஸான் படைகோலத்தில்
    ஆகும் எழுகான்கு எழுத்துண்டதில்
கெறிசேர் அலிபைத்தான் கடுவேவைத்து
    கேசம் பே,தேயும் புருவமாக்கி
மறுஸே கெற்றியும் தலைஜீமுமாம்
    மற்ற ஹே,கேயும் தோட்புயமாம்
உறுதி தால்தாது இதாலிடதுகாது
    உற்ற றேஸேயும் விலாத்துடையாம் 1

இன்னும் கேள்மார்பு ஸீனும்ஷீனும்
    இலங்குங் கண்ணும் சாது,ழாதும்
பின்னுமஃதே,ழேயும் கால்மொளியாம்
    பேசும் ஐன்,கொயின் வலஇடக்கை
உன்னும் எழுத்துபே வலப்புறமாம்
    ஊக்குள்ள காபு இடப்புறமாம்

கன்னுங் காபுதான் முதுகந்தண்டு
லாமு முள்ளங்கால் மீம்மூளையாம் 2

ஒளியு நான்மகான் வாவுதொப்புள்
உகந்த ஹேகல்பு லாமலிபாம்
அழிவில்லா சுல்பி யே,ருஹென்றும்
அருளுங் கலிமாவைப் பகரமாக்கி
மொழியு முதற்கூறு லாஇலாஹ
இல்லல்லா வென்ற தாத்தின்பொருள்
ஒளியின் ஒருகூறு முஹம்மதிர்ற
சூலென்றதின் பொருள் சிபாத்தாகுமே 3

## கலிமா விளக்கப் படலம்

இருநான்கு கோணமது லாவுமாகி
இதுஜிபுரில் அபூபக்கர் சரியத்தாகி
திருவான முக்கோணம் இலாஹாவாகி
சேர்ந்த உமற்மீகாயில் தரீகத்தாகி
மருவான சந்த்ரவட்ட மில்லாவாகி
மறையுதுமான் இசுறாபீல் ஹகீகத்தாகி
அறுகோண வீடதனில் அல்லாவாகி
அலியுமெமன் மஃரிபத்தென் றறிவதாமே 1

அறிவான கமலமூளை ஹாவுமாகி
அம்றாயில் ஹஸனுஸைனும் பாத்திமாவாம்
புரிவான இலாஹியத்து சிறப்பமாகி
பொருளாகி பொருளுடை யருளுமாகி
தெறிவான குதறத்துக் கமாலுமாகி
சீமான் கிலையாகித் தெளிவுமாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவான கிலேயறிந்து கலிமாத்தன்னை
பிரித்தறியும் விபரத்தைப் பேசுவாமே 2

## ஈமான் விளக்கப் படலம்

ஈமான் மார்க்கத்தில் அல்லாவைக்கொண்
டிஸ்லாம் நபியுல்லா ஷரஹைக்கொண்டு
சீமான் தௌஹீது கிலாபத்துக்காம்
சிறந்த விலாயத்து மஃரிபத்து
கோமா னிதுகான்கின் பிரிவானது
குறித்த முதற்பங்கு ளாகிருகும்
பூமான் ரசூலுக்குப் பங்கானது
புகலு மிதுபாத்தின் மஃனவென்றார் 1

துலங்கும்ஈமானில் ஆறென்பது
சூட்ச வுஜூதொன்று சிபத்திலைக்து
துலங்கும் மலக்கூத்தின் இசாருவைக்து
தோற்றும் றஞ்லென்ற ஒளியிலேக்து
இலங்கும் வேதங்கள் ஹாவொன்றைந்து
ஏகன் அஷ்ஹது கலிமாவிலே
கலங்கும் ஒடுக்கத்தில் கைரும்சர்றும்
கருதும் கலிமாவுட் பொருளாகுமே 2

## கலிமா பறுளு விளக்கப் படலம்

கலிமா தனிலுள்ள பறுளுகாலு
கடனு யறிந்தீமான் கொள்ளவிதி
மலிவாங் கலிமாவில் முதற்பறுளு
மகிமை இதுபாத்து தாத்திலாகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவா யிதிலொரு மட்டுதிட்டம்
சேர ஒப்புடன் உவமையில்லான்
வலிவா மிதற்குப்பேர் அஹதியத்துன்
மக்பா வெனச்சொல்ல மறைவானதே 1

ஆன வதில்ரண்டாம் பருளானது
அடரும் இதுபாத்து சிபாத்திலாகி
தானே அவனுட சிபத்துகளில்
தரிப்பா யிருப்பது சிபத்துமூண்டு
கான உஜூதொன்று சுல்பிஜந்து
கலக்க மஆனிஏழு மஅனவியா
வான சிபத்தேழு இருபதையும்
வகையா யறிவதி ரண்டாகுமே 2

இந்த பறுளிலே மூன்றாவது
இதுபாத்து அபுஆ வில்லாஹி
கன்தன் செயல்குல்லி யடங்கலுக்கும்
கபியும் இதுபாத்தின் குணங்களுண்டு
பிந்த அதில்காலாம் பறுளாவது
பேணு மிதுபாத்து சிதிக்கிறசூல்
அந்த றசூலுண்மைத் தூதரென்று
அறிந்தீமான் கொள்ளக் கடனுமென்றார் 3

ஆன மஆனியா சிபத்தேழென்றார்
ஹயாத்துன் இல்முன் இறுதத்துவும்
தானே குதுரத்துன் சம்ஊன்பசர்
தரித்த கலாம்ஏழும் இசுமுதாத்தில்
காணு மதுஜியின் ஆலிமுன்தான்
கருது முரீதுடன் காதிருவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான அதுசமீ உன்பசிறுன்
வகுத்த முத்தகல்லிம் இசும்ஜாமி ஆம் 4

ஜாமி ஆகிய இசுமில்நின்றும்
தன்னை பனுச்செய்யும் வகையறிந்து
ஆமினு ரீன்ற நபிமார்க்கத்தின்
அதபு பறுளுசுன் னத்தறிந்து
ஈமான் தனக்குள்ள பயனறிந்து
இஸ்லாம் பிரிவையுங் கற்றுணர்ந்து
மூமினுகவே தொழவேண்டிய
முறைமை யறியுங்கள் நபியும்மத்தே 5

## ஸுன்னியாத் தொழுகைப் படலம்

பரிசாம் தொழுகையில் இமாமோரைந்து
பகரும் ஜடலத்தில் நினைவுபுத்தி
சிரசாய் வருஞ்சத்தம் உயிருடிாகும்
சிறந்த இமாம் மக்கம் கல்புநெஞ்சு
புரசு மூகத்திசு ஹல்காமின்னும்
பூண்ட மஃமூறு அறுஷாம்நெற்றி
குறுசாம் கண்பார்வை இதையறிந்து
கூறு அஷ்ஹறதின் குறிப்பைகேளும் 1

சொல்லும் அஷ்ஹறது நாலெழுத்து
தொகுத்த சரியத்து தரீகத்தாகும்
வெல்லும் ஹகீகத்து மஃரிபத்து
வேண்டு மிதுநாலு எழுத்தின்பொருள்
நல்லோன் உள்ளமை வன்னிப்புடன்
நவிலும் செயல்நாமம் ஆனதாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லு நியயத்தில் எழுத்துமூன்று
அதுதான் சொல்செயல் தருத்தாகுமே 2

இருக்கும் அஹ்மதென் றெழுத்துகாலும்
இசையும் நிலையது அலிபுஅல்லாவாம்
தொகுக்கும் ஹேயது றாஹாஹவ்வா
சொல்மீம் முஹம்மது சுஜூதுமாகும்
மெருக்கும் தாலது இருப்புஆதம்
மேலாம் முஹம்மதென் றெழுத்து காலும்
வகுக்கும் மீம்தலை ஹேயும்நெஞ்சு
வல்லமீம் தொப்புள் தால்காலென்றார் 3

அல்லா ஹாவென்ற எழுத்துகாலும்
அலிபு அஹதாகும் முதலாம்ஜலால்
சொல்லா விரண்டாம்லாம் ஜமாலதாகும்
சூட்டும் அலிபொன்று கமாலியத்து
எல்லா மவன் ஹாவில் குவியத்தாகும்
இசையும் அக்பரென் றெழுத்துகாலும்
நல்ல நபுசியா சுல்பியாவும்
நாடும் மகானிய்யா மஃனவியாம் 4

பாரும் அல்ஹம்தென் றலிபுமண்ணும்
பகரும் பிடரியா மதற்குக்கொம்பு
கேளாம் பற்குத்தி வாயிற்பேச்சு
நிலையாம் கலிமாவில் தொழுகைலாவாம்
ஆரு மிரண்டாம்லாம் தண்ணீருக்கு
அடையும் வீடது தொப்புளாகும்
சாரும் கருஉரல் கண்பார்வையாம்
தயங்கு மதுருஹா இலாஹாவாமே 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமா மூன்றும்மீம் காற்றுமூலம்
அதற்கு நுரைசால் மூச்சுமாகும்
சீமான் தொழுகையில் சுஜூது மாகும்
சிறந்த கலிமாத்தான் இல்லாவென்று
காமா நெருப்புக்கு வீடுமூளை
கருதும் பித்துடன் காதில்கேள்வி
காமாத் தொழுகையி லிருப்புமாகும்
கல்ல கலிமாத்தான் அல்லாவாமே 6

கூறும் முஹறது இபுறுஹீமாம்
குறிக்கும் யூனூசு அசறுமாகும்
தேறும் மக்ரிபு ஈசாநபி
சிறந்த இஷாவது மூசாவென்றும்
மீறு சுபுஹது ஆதமாகும்
மிகுந்த வணக்கத்தின் பரிசாகவே
ஆரு மிதைகன்று யறிந்துதொழ
அறைந்தார் சரீஅத்தி லூலமாக்களே 7

இந்தப் பரிசாக விளங்கியபின்
ஏகன் அத்தஹிய் யாத்திருப்பில்
சிந்தை கலங்காமல் லாஇலாஹ
இல்லென் றெழுத்ததில் ஹூவைநீட்டி
சந்த மாமந்த மதியத்திலே
தரித்த ஸலாமது நபிக்காகவே
சொந்த அக்வானில் ஆலத்திலே
துலங்கும் ஒளிவுவந் திலங்குங்கண்டாய் 8

தொழுகை ஈமானி லாறுவகை
சூட்சம் இஸ்லாத்தி லைந்துவகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழுதாய் வருமந்தப் பூதமைந்து
பகரும் ஆதார வகையாறுக்கும்
தெளிவாய் வருமித்த தொழுகைக்குப்பின்
தேற்றும் பதினொன்று ஹாலிவானதை
வெளியில் வரும்மூச்சும் புகுமூச்சுக்கும்
வீணாய்ப் போகாமல் நடப்பீர்களே

# ஐனுல் எக்கீன்

## ஞானத்திறவுகோல் படலம்

ஞான வாளருக் கமுதமாக
அறியத் தருகிறேன் சுலூக்கின்பாதை
மான மீதுள்ள வழியானது
வள்ளல் முஹையத்தீன் அறபிசொல்லில்
வானோ னருள்பெற்ற சாதிலிய்யா
வழங்கு மிதுஞான வழிநூல்தன்னை
நானு மிதைசற்றே விளங்கச் சொல்ல
நாடி கிருபைசெய் யாஇலாஹி 1

மணக்கும் படியான மிஃறாஜிலே
மன்னன் திருமறை லிக்காவைச்சூழ்ந்து
துணைகொண் டருள்பெற்ற கபிப்பட்டத்தின்
துய்ய மலர்ப்பதம் சிரசிலேந்து
கணக்குப் படியாக நான்குவழி
கருணை குருமாரின் உபதேசத்தை
தனக்குத் தெரிவான விதப்படி
சாற்றக் கேளுங்கா ணுலகத்தோரே 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழுகை ஆதத்தில் உஜூதினென்ற
சூட்ச மொரு நாளில் மறைந்தனாலே
அழகு தனில்வந்த அமானிதத்தை
அல்லா மறைத்திட்டா. னாதத்திலே
தழுவ இன்னல்அறுளல் அமானத்தென்று
சாற்றினான் வேத குறுஆனிலே
கழிவைத் திருத்திய மணியைத்தேடி
கறந்த பாலாகக் கலிமாச்சொல்லும் 3

சொல்லும் இக்றஉ சூறாவிலே
சோதி முஹம்மதின் ஸானியாவில்
வெல்லும் பிஸ்மியில் அஃழமாக
வைத்தான் குதுபுபள்ளி தன்னைப்பார்த்து
அல்லு மதைக்காண கலிமாவென்னும்
ஹறுபை ஓதுமென் றல்லாசொன்னான்
குல்லு மதைக்கொண்டு சிறப்பமான
குறிப்பைக் கேளுங்கள் கபியும்மத்தே 4

ஆல மரமதின் வித்துக்குள்ளே
அடங்கி யிருக்கிற வாறுபோல
மேலைத் தெருவிலே மூலமென்ற
விசையில் சிர்றெல்லாம் அடக்கிக்கொண்டு
காலங் கடத்திய றூஹாகிய
கண்ணின் மணியான கண்ணாடியில்
ஆலம் ஜபறூத்தைத் தெரிசித்தவர்
அதிக ஜெயம்பெற்றுக் கொளலாமென்றார் 5

இன்னும் இதாஜாவின் சூரத்திலே
இசையும் தீனதை பத்ஹு செய்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணு மலக்கூத்தின் தெளிவைக்கொண்டு
காடுங் குதாசியில் காட்சிகாணும்
பின்னும் திறபிடி இல்லாதொரு
பீரைத் துயர்வது கூடாதென்று
திண்ண முளகாயன் மிஃறாஜிலே
சொன்ன இசாறத்தை ஷாஹறிதுபாரும் 6

ஷாஹறிது வகையென்ற தொழுகையிலே
சொன்னான் இபுலீசு கலக்கத்திர
பகுதி யறியார்க்கு விரோதமாக
பரிவாய் தனித்திரு கபில்தொழுது
மிகுதி பேச்சையும் விரும்பாமலே
விதித்த களாவையும் சுக்றுசெய்து
அஹதாகிய காயன் தஜல்லியாத்தை
அறிந்து தொழச்சொன்னான் குறுஆனிலே 7

அறிந்து இன்னு அஃதைனுவிலே
அருளும் ஷாஹறிதொன்றில் பல்துமாக
தெரிந்து ஷாஹறிதிட்டு பத்ஹாகிய
சிறந்த கபிசல வாத்தையோதி
வருந்தி இலாஹியந்த மக்சூதுடன்
வரிழாக்க மத்லுபி என்று
தெரிந்து ஜமாலென்ற தஜல்லியாத்தின்
சிர்றை யறிந்துபார் முஸ்லிம்களே 8

ஈமான் தனைக்கொண்ட முஸ்லிம்களே
இறையோ கபிசல வாத்தோதியே
சீமான் ஷாஹறிதிலும் திக்ரிலையும்
தேற்றி திறபிடி இல்லாவிட்டால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோமான் தவுபாவும் ஆரிபீன்கள்
கூறும் ஷாஹறிதைத்து செய்தாவது
பூமான் திறபிடி யாகுமென்று
பொருந்தி இதின்வழி தெரிந்துபாரும் 9

பார்க்கப் பெரிதான ஜபரூத்துகள்
பகரும் ஷாஹறிதைத்து செய்யவிதி
சேர்க்கும் கண்ணாடி நிழலுடனே
சிறுஜான் முனீறுவும் கமருஷம்ஸா
மேற்க அதிலந்த ஒளிவைப்போல
மேன்மை பெறுவீரென் றிதையறிய
தீர்க்கத் தரிசன உலமாக்களை
தேடிக் கேட்டறிந் திடுவீர்களே 10

ஆன வாஹிதின் மற்தபாவில்
அடங்கி இருக்கிற கண்ணாடியில்
தானே உலகத்தில் ஒளிவில்நின்றும்
தஜல்லி வெளியாகும் ஜமாலாகவே
வானோன் தனைக்கொண்டு அடக்கியாளும்
வல்லமையுள்ள றப்பானவன்
அவனே அல்ஹாக்கு மல்ஹாக்கத்தில்
அருளினன் பாத்தின் மஃனாவிலே 11

உடலி லிருக்கிற ரூஹாகாளும்
ஒன்றை விட்டொன்று பிரியுமுன்னே
கடல்போ லுளகல்பை கலக்கியுன்னை
கண்டு தெரிசிக்கச் சொன்னவாக்கை
திடனா யறிந்துநீ ஷாஹறிது செய்து
சிறந்த முஷாஹிதா முறுக்கபாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடமை தனைவிட்டு நேர்பாதையில்
வந்தா லவர்இன்ஸான் காமிலாமே 12

இதற்கு மேற்பாதை ஷெய்குமார்க்கு
இந்தப் பாதையில் தனித்திருந்து
சிந்தை மறவாம லாஇலாஹ
இல்லல் லாஹுவின் மஃனவது
சொந்தச் செயலெல்லாம் அல்லாவென்று
தோற்று முஷாஹிதா வீதப்படி
வந்து சிலபல கேள்வியுண்டும்
வாகாய் மறுமொழி சிபத்தைக்கேளும் 13

கேளு மிரவலாய் அறிவுநாட்டம்
தத்து வம்பார்வை கேள்விமூச்சு
ஆளும் ஹயாத்தையும் நமக்குத்தந்தான்
ஆதலால் வந்தே னென்றுசொல்லு
காணுக் திருநாமம் பேரைக்கேட்டால்
நாய னிட்டபேர் யாஹூவென்றும்
வாழும் படிச்சொல்ல கியாமமட்டும்
வசமா யிருமென மீண்டுபோவார் 14

மீண்டு போறவர் மன்சூரென்றும்
பறுகா மலக்குடன் முன்கர்நகீர்
ஆண்டவர் ஆதம் ஹவ்வாவுடன்
அழகாகிய நமது ஷெய்குமாகும்
வாண்டு மலக்கலின் மவுத்திலொன்று
வாழும் சமதானி பொழுதுடனே
நீண்ட நிலவுபோல் காட்சிகாணும்
நிஜமா யிதற்குப்பின் தன்னைக்காண்பாய் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டா லிதுதானே லிகாவென்றறி
காணுவிடில் தெண்டிப்பி லிருக்கவேணும்
விண்டேன் சாஹறு போல் நடக்கவேணும்
வேண்டு மினும்சில காட்சிகாணும்
அண்டே ஹைவான்கள் அம்மாறத்தாம்
அழகாம் குபிரோர்கள் லவ்வாமத்தாம்
தொண்டன் உலமாக்கள் முல்ஹிமாவாம்
தொகுத்த மஷாயிகு முத்மஇன்னு 16

இந்தப் படிதானே மஷாயிகுமார்
எடுத்து நடந்துதான் காமிலானூர்
வந்த படியெல்லாம் பேசுவார்கள்
வாய்ஞா னக்கார ஜா'ஹிலாகும்
விந்தை யாயவர் சொல்லைக்கேட்டு
வீணு யிபுலீசு கையிற்சிக்கி
சொந்த மார்க்கத்தை யிழந்துபாவம்
சுற்றி நரகத்தில் நபுசுவிழும் 17

## ஹக்குல் எக்கீன்
## ஞான உதயப் படலம்

உம்மத் தர்கிய மூமின்களே
உகப்பாம் வணக்கத்தில் ஹக்குல்எக்கீன்
தம்மை உரைக்கிறேன் உணர்ந்துநீரும்
தவத்தி லிருந்துபார் முஷாஹிதாவில்
ஹிம்மத் தாகவே பீரிடத்தில்
இருந்து படிப்படி தெரிந்துகொள்ள
கிஃமத் தாகிய சுவனவாசல்
கிலைமை யறிந்திட லாகுமென்றார் 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித வடிவென்னும் பட்டணத்தில்
வண்ணக் கிளியினம் வந்துமேயும்
இனிய தலங்கண்டு அத்தலத்தில்
எங்க ளிருகாலை யிழுத்தூக்கட்டி
வனிதை மடவார்கள் முகர்றபான
வானோ ரடிவந்து சூழக்காணும்
தனியோ னிடத்தில்போய்ச் சேர்வீரென்று
சங்கை கபிமகா னெடுத்தோதினார் 2

கூறு மண்ணிலோ ராறுகலை
குறிக்குந் தண்ணீரி லைந்துகலை
ஆறி வருங்காற்றில் முக்கால்கலை
அக்கினி தனி லொருகாலதாய்
சாரும் பனிரண்டு கலைகளோடும்
தக்க சுவாசத்தில் நடைபழகி
பாரு முஷாஹிதா முறுக்கபாவில்
பலனை யடையலா மாகுந்தானே.

ஆன விபரம்போல் லாஇலாஹ
இல்லல்லா மண்ணின் கலையில் நூறு
தானே யதற்குப்பின் இல்லல்லாவை
தண்ணீரி லோடுங் கலையில் நூறு
மானே யதற்கப்பால் அல்லாஹுவை
மடக்கி வருங்காற்றின் கலையில் நூறு
கானே யதற்கப்பால் ஹுஹுவென்ன.
கடத்தி நெருப்பிட கலை நூறுமே 4

நூறாய் வருமாகா சத்துக்குப்பின்
நுவலும் சுழிமுனை இழுத்துவாங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேறிவரு மூச்சேற் றிறக்கஞ்செய்து
தெளிந்து ஷுஹூதில் கோட்டமாக
ஏறி முஷாஹிதா நடைபழகி
எழுந்து தெளிந்துமுன் னோக்கிப்பார்க்க
ஆறுஆதார நிலைமை யெல்லாம்
அறியும் படிமுப்பாழ் வெளிதோன்றுமே 5

முப்பாழ் வெளிதோன்றி சந்த்ரகலை
மூளைத்த சூரிய கலையினோடு
மெய்ப்பாய் வருமூலா தாரத்துடன்
மேவும் பனிரண்டு சுவாசகலை
அப்பால் வரும்லா மக்காமெனவே
அறிந்து தவனிலை ஏற்படுத்த
கற்பால் அறிந்தவர் பாலேசென்று
கன்றீ யறிந்துபா ராதிநாலே 6

ஆதியா மந்த நான்மயத்தில்
அலிபை மனமென்ற ஷத்தில்வைத்து
சோதி மணியென்ற மத்தானது
சுழித்து மீமாகத் துலங்கியபின்
நீதி பாழென்ற வீடுதாண்டி
நிறைந்த மண்டல மூன்றுக்கப்பால்
சாதி வேறில்லை நிலைமையற்று
தன்னைத் தானாக மறைந்தஹூவே 7

ஹூவாம் வலம்புரி சங்கினோசை
உயர நிலைமையாய் சேவல்கூவும்
மாவாய்ப் பிறந்தந்த முஹம்மதியா
மறையும் மலக்கூத்தின் ஒளியாகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவா யமுதுண்டு இலங்குமந்த
புகலு முஃஜிதாத் தானதிலே
தேவாம் பலபல ஒளிசூழவே
தெளிவா யறிகின்ற கூறுகேளே 8

கூறு மண்ணிலே கலையோடினல்
குளிக்கும் ஒளிவெள்ளைப் பழுங்கிநிறம்
ஏறும் தண்ணீரில் கலையோடினல்
இலங்கும் ஒளிவுசெம் பவளநிறம்
மீறி வரும்காற்றில் கலையோடினல்
மிருதும் ஒளிபச்சை பசுமைநிறம்
தேறு நெருப்பிலே கலையோடினல்
தெளியும் கண்ணாடி ஒளிவட்டமே 9

வட்ட மற்தபா காற்பதுண்டும்
வளரு முஷாஹிதா பதினுவுடன்
தேட்ட மிருப்பிலே மிகுதியுண்டு
தெளிவா யதில்காலு தெரிவுமுண்டு
வட்ட மனுகாத தரஜாஎழு
வளமாய் வருகாட்சி பன்னிரண்டு
கூட்ட மதில்காலு முஷாஹிதாவை
கூறக் கேளுங்கள் மூஸ்லிம்களே 10

## முஷாஹிதா படலம்

ஆன திக்றுஜல்லி லாஇலாஹ
இல்லல்லா எழு நாத்துக்குப்பின்
தானே சம்யான மாயிருந்து
தனிலா மூகத்திலும் இலாஹாவதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானே தாமரை மொட்டில்வைத்து
மறவா திருஷெய்கு நாட்டத்திலே
ஈன மனுகாத ஷெய்குமுதல்
இபிலீ சுடன்வந் தெதிர்தோன்றுமே 1

தோன்றும் திக்ருகல்பி இல்லல்லாவை
தோணும் அத்தஹிய் யாத்திருப்பில்
வேண்டும் முராகிலே காக்கைத்தட்டி
பிஸ்மி கல்பிலே சுடர்நோக்கிய
பூண்ட கல்பிலே பார்வையாக
பொருத்தி மறவாம லிருக்கும்போது
தோன்ற வருமந்தி மேகம்போலும்
துயராய் வரக்கண்டால் பாவமாமே 2

கண்டா லதுகமர் நிலவுபோல
கண்ணாடி கண்டால் நன்மையாகும்
விண்டே அல்லாஹு வெனும்திக்றை
விரையும் ஷம்ஸாக முஷாஹிதாச்செய்
அண்டே பலபல சூரத்துவும்
அருமை முஹையத்தீன் தோற்றங்காணும்
கொண்டே ஹூவல்லா முஷாஹிதாச்செய்
குறிக்கும் ரசூல்வந்து பேசக்காணும் 3

பார்க்க மயிலிட தோகைபோலும்
பலபல வெள்ளி யுதிர்வதாயும்
தீர்க்கத் தரிசியாம் மஷாயிகுமார்
சிறந்த பலவிதக் காட்சிகாணும்
கூர்க்க வதற்குப்பின் கண்ணாடியில்
குதறத்தால் தங்கள் சூரத்தாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்க மதுவூட்டக் கண்டாயானால்
இதுதான் விகாவென இயம்பினரே 4

ஞான மானது கப்பலாகும்
அதனைக் கரைசேர்க்கும் முஹம்மதியா
தானே யதின்மாலின் ஷெய்காகவும்
தக்க மஃலியத் துள்ளோருமாய்
மான மில்லாத வேசியர்க்கும்
வகுப்பு விளங்காத சிறுவருக்கும்
ஈனமிலா இந்த ஞான நூலை
எடுத்து போதித்தல் ஆகாதென்றார் 5

## மகாமாத்துப் பிரிவு படலம்

ஒன்றும் சரீஅத்து மண்ணின்வீடு
உவந்த அம்மாறு ஜிசுமானியாம்
நன்றும் பற்குத்தி நாவின்பேச்சு
நாசூத் தெனுமகாம் ஆலம்இன்ஸான்
குன்று வபுபக்கர் இல்முல்எக்கீன்
கோமான் தவ்றுத்து மூசாவெள்ளை
பின்னும் ஜிபுரியில் தொலியதாகும்
பேசும் திக்றுஜல்லி அலிபானதே 6

அலிபாம் தரீகத்து தண்ணீராகும்
அதுதான் லவ்வாமா சுபுஹானியாம்
வலுவாம் கருஈரல் கண்ணின்பார்வை
வாச மலக்கூத்து அஜ்ஸாம் ஆலம்
கலிபா உமறது ஐனுல்எக்கீன்
காணும் சபூர்வேதம் தாவூதுக்காம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவாம் நிறம்சிவப்பு மீக்காயிலாம்
சேரும் திக்றுகல்பி லாமானதே 2

ஆன ஹக்கீகத்து காற்றுமாகும்
அழகா மூல்ஷிமா ரூஹானியாம்
தானே நுரையீரல் மூச்சுமாகும்
தனியோன் ஐபரூத்து ஆலமிதால்
மானே உதுமானும் ஹக்குல்எக்கீன்
வளர் இன்ஜில் ஈசா நிறமும்பச்சை
கோனும் இசுறாபீல் கரம்புதிக்கிர்
கொள்ளு மதுரூஹி எழுத்துஹே,யே 3

காலாம் மஅரிபா நெருப்பின்வீடு
கபுசு முத்மஇன்னு சுல்த்தானியா
மேலாம் தலம்பித்து காதிற்கேள்வி
விளங்கும் லாஹூத்து ஆலம்அற்வாஹ்
பாலாம் அலிபாகும் கமாலுல் எக்கீன்
பகரும் புறுகானில் மூஹம்மதென்றும்
சீலா நிறம்கருப்பு இசுறாயீலாம்
சிறந்த எலும்புதிக்ரு சிர்றிமீமே 4

அஞ்சாம் சூபியத் தாகாசமாம்
அழகாம் ருளியா குதுசிறாஹூ
மிஞ்சாத் தலம்மூளை யுயர் தாமரை
விளங்கு ஜம்ஹூத்து றாஹானியாம்
பஞ்சாதி வையான மூஹப்பத்தாகும்
பகரு முப்பொருள் ஜமாலுல்எக்கீன்
நெஞ்சா நிறம்மஞ்சள் அம்றாயிலாம்
நிறையும் திக்ருகபி தாலானதே 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு வணக்கப் படலம்

ஆன காசூத்து காசிநுனி
அழகாம் புருவடி காற்வோணமாம்
தானே ஷாஹூதுக்கு நுனிபார்வையாம்
தக்க இடமார்பின் கீழதாக
மானே அதின்திக்று லாஇலாஹ
இல்லல் லாஹுவில் இலாஹாவென்றும்
காணு ரிதின்காட்சி முன்கிணுத்தை
காட்டும் ஜிபுரியில் அபூபக்கராம் 1

அறியும் மலக்கூத்து காசிநீளம்,
அழகாம் குயில்மாடம் முக்கோணமாம்
தரியாம் ஷாஹூதுக்கு காசிமேடு
தக்க வலமார்பின் ஒளிவட்டமாம்
செறியா மதின்திக்ரு இல்லல்லாஹு
செரா முஷாஹிதா அலிபும்ஷத்தும்
குறியா மிதின்காட்சி மஷாயிகுமார்
குறித்த மீக்காயில் உமருமென்றார் 2

என்றும் ஜபரூத்து கண்ணாடியாம்
இலங்கு மதுஅன்னம் சந்த்ரவட்டம்
கொண்டே ஷாஹூதுக்கு நடுத்தானமாம்
குறிக்கு மதுநெஞ்சு வாலைரூபம்
விண்டே னதின்திக்ரு அல்லாஹுவாம்
விரையும் றம்சாக முஷாஹிதாச்செய்
தண்டா மரைசூழ்ந்த முஹம்மதிய்யா
தக்க இசுறாபீல் உதுமானுமாம் 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன லாஹூத்து பள்ளிமேடாம்
அடக்க மதில்தாரு அறுகோணமாம்
தானே ஷாஹூதுக்கு பார்வைமேலே
தக்க இளம்பாலர் கல்பூவீடு
கோனே யதின்திக்று ஹூவல்லாஹூ
கொளுகும் தாஹாவை கோட்டம்பாரு
ஈன மணுகாத தலைலாவுமாம்
இலங்கும் இசுமுயில் அலியாமென்றார் 4

ஆன ஜம்ஹூத்து சேர்மானமாம்
அழகாம் மயில்ரூபம் அதுசேர்வட்டம்
மானே குதுபுமா ருதயங்காணும்
மன்னர் முஹம்மது சிங்காசனம்
தானே வயிரம்பொற் பவளமாக
தக்க மஹ்மூதர் நிலைமைகாணும்
காணே இதுதானே இதுபாதுல்லா
கடந்த மற்தபா இன்னுங்கேளே 5

சொல்லுக் கடங்காத பாஹூத்திலே
துய்ய றசூல்வந்து தோற்றங்காணும்
நல்லபடி கேட்ட வாமுண்டாகும்
நாடும் திக்ருகள் அவுறாதுகள்
உள்ள மிஃறாஜிலே நரகம்சொர்க்கம்
உயர்ந்த தவப்பேறும் தவமும்கிட்டும்
நல்ல தம்ஹூத்து விகாவானதில்
நயன் வசனித்தான் நபிக்குத்தானே 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஷாஹிதா காட்சிப் படலம்

முதலாக் தலத்தினில் காசூத்திலே
முன்கர் நக்கீர்வந்து கேள்விபோடும்
நதமாம் இரவலாய் நமக்குநாயன்
நந்த சிபத்தேழும் போதிந்துவந்தேன்
இதலா மெனச்சொல் சலாமுஞ்சொல்லி
இன்ப சுகமாக இருமென்றோதும்
நிதலா மதற்குப்பின் நிருமன்காத்தீப்
கோரா யதுவந்து கேள்விபோடும் 1

போடும் முன்சொன்ன மறுமொழியாம்
புகலும் திராசுக்கு ஹதியாவையும்
நாடும் சிறுத்துக்கு ஹதியாவையும்
நல்ல விளக்கத்தின் திறவுகோலும்
பாடும் மயில்ரூப மதனில்நாயன்
பதிந்த திருநாமப் பேரறிந்தால்
தேடு மிறைவனை அறிந்துநன்றாய்
ஜெயம் பெற்றோரென்று அல்லாசொன்னான் 2

சொன்ன விதன்படி விளங்காவிட்டால்
துய்ய றசூலையே பிடிகயிறாய்
பின்னால் கமாலான ஷெய்குமாரை
பிடித்து நடப்பது வேணுமென்றும்
முன்னால் முஹம்மது நபியுடனே
முஸ்தபாக் கமால் தானுஞ்சொன்னார்
மன்ன னிதின்படி கேர்பாதையில்
வரிசை தனைப்பெற்று வாழலாமே 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்ன முஷாஹிதா வீதத்திலே
சொல்லுக் கடங்காத அஸ்ருகுண்டு
இன்னும் சிலபல மனுமியத்தை
எடுத்து ஶ்ரீதீன்க ளாஹியவேண்டி
அன்ன முஷாஹிதா விருக்கும்போது
அழகா யொளிசூழ மனுமில்கண்டால்
பின்னும் உடலிலே ஒளிவென்றறி
பெருத்த மரத்தோப்பு அதனைக்கண்டால் 4

கண்டாலது மண்ணின் குணமென்றறி
கனவி லதுவாசல் பருக்கக்கண்டால்
விண்டே னதுகாற்றின் குணமென்றறி
விரும்பும் மஜ்லிசு பள்ளிகண்டால்
அண்டே சேர்வழி யாமென்றறி
அழகாம் இபுருஹீம் நபிதீதாரு
சென்றே வருமின்போல் காணுமென்றும்
சிறந்த நபிமூசா தீதாருதான் 5

ஆறு மலைபோல காணுமென்றும்
அழகாம் ஈசாநன் நபிதீதாரு
தேறும் வானத்தில் பறக்கக்காணும்
சிறந்த ஆதம்நன் நபிதீதாரு
ஏறு பூமிகள் பிளக்கக்காணும்
ஏழிலா மதுநூஹு நபிதீதாரு
மீறு கடல்போல காணுமென்றும்
மேலர் முஹம்மது நபிதீதாரு 6

தீதார் நிலவுபோல் வரவுகாணும்
ஜல்ல ஜலாலுஹு வின்தீதாரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீதார் பொழுதுபோல் வரவுகானும்
    மேலாங் கஷுபுகள் விதப்படி
ஆதார் அக்லியா கல்பியாவும்
    அழகாம் ருஹியா சிர்றியுடன்
வீதார் ஹக்கிக்கியா ஆகஐந்து
    விதப் படிக்குள்ள தறஜாவுமே 7

# தரஜாத்துப் படலம்

இதன்தன் தறஜாவை சொல்லக்கேளும்
    இறையோன் தான் சொன்ன குறுன் ஆயத்தில்
அவன்தன் தனக்குள்ள முயற்சிப்படி
    ஆகு மெனச்சொல்லை யுணர்ந்துபாரு
தவங்கள் ஷரிஅத்து தரீகத்துடன்
    தக்க ஹகீகத்து மஃரிபத்து
இணங்குந் தவமவர் அவர்க்கல்லாமல்
    இன்னொருவர்க்கு இல்லையாமென்றார் 1

என்றான் காபிரு கள்சூரத்தை
    இறையோன் மாற்றினல் மீளாதென்றும்
நன்று யறிவித்தா னிதையுணர்ந்து
    நல்ல தவம்செய்ய கடனுமென்றும்
மண்ட லஞ்சூழும் அகீதாவிலே
    மாறு அசுஹரி மாத்துரீது
சென்றே முஷாஹிதா முறுக்கபாபோல்
    செய்யுந் தவமானல் சொல்லக்கேளும் 2

கேளு மிதுவந்து கல்பு ருஹுக்
    கிசைந்த தொழுகையா யிருப்பதாலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளு மிதுவந்து மாறிமாறி
காய னிடத்திலே ஹாசிலாகும்
சூழும் ஐமாலியத் தானதாத்து
சூழ்ந்து வருவதும் பேச்சுமுண்டு
வாழும் தவம்விட்டால் நூர்ந்துபோகும்
மாற்றி புதுபிக்கக் கடமையாமே 3

ஆன திரைஎழுங் கடக்குமட்டும்
அதிலே தனிப்பதும் முழிப்பதுவும்
வானின் கடக்தபின் பனுவுக்குப்பின்
வசிலாத் தனைச்செய்தல் சீர்திருத்தல்
தேனே யழிவுசொல் ஐதுபிலானல்
தெளிந்து அறிவுசொல் சறஹிலேதும்
ஈன மணுகாமல் காப்பதுவும்
இதற்குக் கடமையா யிருக்குங்கண்டாய் 4

இருக்கு முன்சொன்ன ஒன்றுக்கொன்று
ஏற்ற மில்லாத் தராஜாக்களும்
பெருக்கு மறுமூன்றும் ஒன்றுக்கொன்று
பேறும் உயர்த்தியும் பலமுமுண்டு
தருக்கு முஸ்லிம்கள் மூமீன்களும்
தக்க அவுலியா அப்தாலுடன்
புரிக்கு முகர்றபீன் அன்பியாக்கள்
புகலு முற்சலீன் களுமாகுமே 5

முற்ச லீன்களும் தராஜாக்களும்
முடிந்த பிறகவர் அவர்கூட்டத்தை
அருமை யுடனவன் றப்பைநோக்கி
ஆன சிறுபாவம் பொறுக்கத்தேடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிசை குருவோதல் கையேந்துதல்
வாகா யினத்தாரின் கொடைஸக்காத்து
தெரிச னைத்தேடி கரைசேருவார்
சிறிய பாவங்கள் பொறுக்கப்படும் 6

தாஜா அமலுக்குத் தகுந்தபடி
தக்க கிஃமத்து ஸக்காத்துஹஜ்ஜு
வரிசை துஆப்பேறு இவைகளாலும்
வாரி கடல்போல கிடைக்குமென்றும்
தெரிசன முள்ள மிஃறாஜிலே
சென்று வசனித்த நபியோதினர்
உருசை பலன்பெற முஸ்லிம்களே
ஒழுங்கு பிரகாரம் நடப்பீர்களே 7

பறுளாம் ஷரீஅத்து தௌஹீதானல்
பகரும் பதவிதான் அபூபக்கராம்
திரளாம் தரீகத்து தௌஹீதானல்
சேரும் உமரிட பதவிகிட்டும்
பிரளா ஹகீகத்து தௌஹீதானல்
பேசும் பதவிதான் உதுமானியாம்
அருளாம் மஃரிபா தௌஹீதானல்
அலியார் தனக்குள்ள பதவியாமே 8

## உபதேசப் படலம்

வரிசை முஹம்மது நபியிடத்தில்
வல்லோன் ஜிபுரியில் சலாமோதினர்
தெரிச னைக்குள்ள நபியேயிந்த
தேனு வமுதமாங் கலிமாத்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிசைப் பயனில்லார் தொழுகைப்பயன்
ஒன்றுங் கொடாதென உம்மத்துக்கு
பிரிச முடனிந்தக் கலிமாத்தனை
பிரித்துக் கொடுமென விரித்தோதினர் 1

ஓதினா ரிந்தக் கலிமாவிலே
உள்ள அலிபைத்தான் மத்தாக்கிய
நீதி படிகல்பி லிருத்தியபின்
நேரே நாட்டத்தை யுள்வாங்கிய
பாதை தனிலந்த நுனிப்பார்வையால்
பகரு மொருசுழி சுழித்தெழும்பி
ஓது மூனை தனில் லுதிப்பானது
உடையோன் திருநுகத் துல்லாவிலே 2

அல்லா இதுபாத்தில் நபியேயிந்த
அருமை யும்மத்தின் ஷெய்குமார்க்கு
வல்லா னிடங்கேட்ட ரகசியத்தை
வகுத்து கொடுத்திட வேணுமென்றும்
சல்லாப மாய்ஹூவும் மீமுமொன்றாய்
தரிக்கும் தவ்ஹீதின் அலங்காரத்தை
கல்லாய் தெரிசிக்க நடுநிலையில்
நாட்டந் தனிலொரு வடிவுதோன்றும் 3

தாத்து கலிமாவில் மூன்றெழுத்தில்
தன்னை பனைச்செய்து தாத்துல்லாவை
காற்று கடலலை மோதுமாப்போல்
கண்டு சுழிமுனை வாசலிலே
சேர்த்து ஷாஹூதிட்டு ரசூலொளியை
தெளிவா யறியாத உம்மத்துகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றுக் கிருக்தாலும் தட்டழிந்து
நூராகிய ஈமான் சேராரென்றார் 4

ஈமான் வகையிலே இல்முல்ளக்கின்
எல்லா மொருமிக்க நாலுபங்கு
கோமான் குறு ஆனி விறக்கிவைத்தான்
குத்து விளக்கான ஐனுல்ளக்கின்
பூமான் தெரிசித்து ஹக்குல்ளக்கின்
போற்றிப் படிப்படி ஏற்றமானல்
சீமான் தனக்குள்ள கமாலியத்தின்
செகத்தில் பிரயோசன மெத்திக்கொள்ளும் 5

கொள்ளும் முன்னூற்றுப் பதிமூன்றெனக்
கூறு முறுசலா நபிமார்க்கெல்லாம்
விள்ளுங் கலிமாவைப் படிப்படியே
விளங்கும் அடிமுடி நடுவாகவே
நள்ளும் தௌஹீதை உறுதிகொண்டு
நாயன் திக்ரிலே நடைபழகி
தள்ளு மனமென்ற ஆசைவிட
தவத்தி லிதுகாலாம் பாதையென்றான் 6

காலாம் வேதத்தில் அல்லாசொன்னன்
நபியா முஸ்தபா கமாலானது
நூலா லதின்சிர்றை விளங்கியபின்
நூரானி யக்கோலங் கொண்டெழுந்து
சாலா றகூலென்ற ஜமாலானது
தங்குந் திசையெங்கும் பரந்திலங்கி
வாலா இருபத்தி காலாகிய
வழங்குங் கலிமாவுட் பொருளாமென்றார் 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தா கியமரம் குன்னென்றோசை
வெள்ளை நக்தெனும் பயக்கூனிலே
சித்தாய் மரமிலை காய்ப்பூபழம்
தெரியும் பனிரண்டு பனாருக்குள்ள
முத்தாய்ப் பவளமாய் மரகதமாய்
மூலையில் பனிரண்டு அறிகுறியாய்
பத்தாய்ப் பயந்தரு மெட்டெழுத்தாய்
பாலோகங்களாய் விகாவானதே 8

பாரு அலிபுலா மீமானதில்
பகரு மூரீதுக்கு ரகசியத்தில்
ஆரு மதூகாட்டம் தன்னில்நின்றும்
அலிபை உஜூதாக அறிவித்தபின்
சாரு மறுமீமை மூஹம்மதென்னும்
தவத்தில் ரகசியப் பொருளுஞ்சொல்லி
சேரு மிருளற ஹாமீமென்ற
சொந்த பொருள்வந்து தோற்றஞ்செய்யும் 9

தோற்றும் பனிப்பெய்த வாறுபோல
துய்யோன் அறுசிலே கிந்தீல்களும்
போற்றுங் குருமாரின் உபதேசமும்
புகலு மாலிக்கு யவ்மித்தீனும்
பாத்தி ஹாவிலே முருத்தங்களும்
பவக் கடிதமும் நன்மைதின்மை
தோற்றும் மூஷாஹிதா தன்னில்வந்து
தெளியுந் திருக்காட்சி ஒளியாதென்றூர் 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவாச நிலைப் படலம்

வாஜி பாகிய மூஸ்லிம்களே
வல்லமை யுள்ள ஹிம்மத்தோர்கள்
நாசி வாய்காது தனையடைத்து
நாயன் திக்ரிலே ஹாசிலானோர்
வீசத் தகுமுள்ள சுவாசமோடும்
விதத்தை யறிவது வேணுமென்றும்
ஓசைக் கண்மணி யாகவந்த
உண்மை நபிசொன்ன ருமத்துக்கே 1

இந்தச் சரந்தானே மூலப்பொறி
இருந்து கஃபாவெண் டிசைக்குமந்த
உந்திக் கமலத்தில் வலஞ்சுற்றிய
உரையும் அறபாத்து நரையீரலில்
தந்தி பைத்துல்லா வென்றுசெப்பும்
தானே சுழிமுனை யதனிற்சென்று
நந்தி சபாமறு வாவென்றோதும்
நாசித் துவாரத்தா லோடும்பாரே 2

ஓடும் சரமிரு கண்ணினாலே
உறையும் பதினாறங் குலங்களுக்கு
கூடு மிருபத்தெண் ணாயிரத்து
குளிர்ந்த அறுநூறுங் காதினாலே
கூடி வருமெட்டங் குலங்களுக்கு
தொகையில் ஏழல்பு முன்னூறுமாம்
பாடி வாயாலங் குலமெட்டுக்கு
பதினே ழாயிரத் தொடுகோனூறும் 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதி வருமக்த மூக்கினாலே
உயர்ந்த அங்குலம் பனிரண்டுக்கு
நீதி இருபத்தோ ராயிரத்து
நிலைத்து அறுநூறு மிருக்குமென்றும்
வேத மதுநான்கு வகையினாலும்
விரைக்த இருபத்தோ ராயிரமும்
பாத முறுமிந்தச் சரங்களெல்லாம்
பதிக்கும் ஐம்பத்தோ ரட்சரமாம் 4

ஆகும் அன்னியத் ததுதவிர
அழியா திருக்கிற இருபங்குதான்
பூகும் ஹூவெனும் குவியத்தது
பொருந்தி பதினொரு அட்சரங்கொண்
டேகும் கமலத்தில் புகுதுவதால்
இன்சயும் பதினொரு அட்சரமும்
தாக முறுவைந்து பூதமொடு
தணியு மிருமூன்று ஆதாரமாம் 5

வாசி தனைப்பற்றும் சரமானது
வருகும் ஒருநாளுக் கோடும்வாறு
பேசு முன்னூற்றி அறுபதாகும்
பெரிய இரவிலும் பகலுமாக
நேசம் இருபத்தோ ராயிரத்து
நிலைத்த அறுநூறு சரங்களுண்டும்
நாசி தனிலுள்ள சரப்படிக்கு
நாடி எழுபத்தீ ராயிரமாம் 6

நாடி எழுபத்தீ ராயிரத்தில்
நான்கு நாடியை நவிலக்கேளு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடி விருங்காற்று வாதகாடி
அடையும் நெருப்பது பித்தகாடி
பூடி வரும்புனல் சிலேத்மகாடி
புகலு வதுமண்ணில் ஐயுகாடி
வாடி வரும்ஐயம் சேத்துமத்தில்
வரியுள் ளிருப்பதா லிரண்டுமொன்றும் 7

காலந் தனில்காடி மூன்றெனவே
கருத்தி லுரைத்ததின் பயனேதென்றால்
கோல முறுவாதம் உந்திதனை
கொளுகி மலமண்டு தானமாகும்
சால முறுபித்தம் மார்புதனை
தரித்துச் சிறுநீரை தானமாக்கும்
பால முறுஐயம் மூச்சதனை
பதுங்கி நுத்பாவை தானமாக்கும் 8

ஆவென் றதிலைந்து அஸ்மாவுண்டு
அந்த அனாசிரின் கடனிறுத்து
ஈயென் றதிலேழு சிபத்துமுண்டு
இன்ப முடனதின் புரமேறியே
ஹூவென் றதிலே தௌஹீதிலே
உகந்து உஜூதுக்கு ஷுஹூதுசெய்து
வாவென் றதின்சிர்றை யறிவீரென்று
வரிசை நபிமகா னெடுத்தோதினார் 9

அமையும் சூபியாக் காரர்களில்
ஆக பதினாங்கு விபரமது
இமையும் ஸுன்னியா கல்வத்தியா
இசைந்த ஆலியா அவ்லியாயியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமையும் சம்ருகி யாஉப்பியா
தரித்த ஹவ்ரிஇ பாஷியாவும்.
புமையும் முத்தக்காமிலா முத்தசாகிலா
புகலும் வாகியா இல்ஹாமியா 10

ஆகப் பனிரண்டுக் துயரலாகா
அசு ஹரியாவு மாதுரீது
ஏக இதுரண்டும் துயரலாகும்
இன்னும் ஷாஹையும் கடக்காமலும்
பாகு பரிசான சறுத்திலாறு
பகரும் பொருத்தமும் துப்புரவும்
தேக சுக்றுடன் சபூர்தவக்கல்
சிறந்த தௌபாவும் சத்தாகுமே 11

சறுத்து படியாக நடந்துகல்ல
தாத்து சிபாத்தில் பனுவாகியே
பொருத்தப் படிநல்ல அமல்கள்செய்து
பேறும் தறஜாவும் பெற்றுவாழ்க
திருத்தப் படுத்தியே படிப்பவர்க்கும்
செப்பு மிதன்படி நடப்பவர்க்கும்
அருத்த முடையவ னனசோதி
அல்லா இதைகபூல் ஆக்கஆமீன் 12

மக்அது சிதுகு மனோன்மணி மாலை

முற்றிற்று

Ibraheem Press, 571-H High Rd., Triplicane. Madras. 5.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7B
2-40

PRINTED
AT
IBRAHEEM
PRESS
MADRAS 5.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org